## டாஸ்மாக் வழக்கு:

# நடவடிக்கை எடுக்க அமலாக்கத் துறைக்கு ஐகோர்ட் தடை!

சென்னை, மார்ச் 21 -

டாஸ்மாக் நிறுவனத்தில் சோதனை நடத்தியது தொடர்பாக மார்ச் 25ம் தேதி வரை எந்த மேல்நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என அமலாக்கத் துறைக்கு உத்தரவிட்ட சென்னை உயர் நீதிமன்றம், தமிழக அரசு மனுவுக்கு பதிலளிக்கும்படியும் உத்தரவிட்டுள்ளது.

டாஸ்மாக் தலைமை அலுவலகத்தில் கடந்த 6ம் தேதி முதல் 8ம் தேதி வரை சோதனை நடத்திய அமலாக்கத் துறை, டாஸ்மாக் நிறுவனத்துக்கு மதுபானங்கள் கொள்முதல் செய்தது, பார் உரிமம் வழங்கியது, மதுபானங்களை மதுபானக் கடைகளுக்கு கொண்டு செல்வதற்கான போக்குவரத்துக்கு டெண்டர் வழங்கியது உள்ளிட்டவற்றில் ரூ.1,000 கோடி முறைகேடு நடந்துள்ளதாக அறிக்கை வெளியிட்டது.

அமலாக்கத் துறையின் இந்த சோதனையை அரசியலமைப்பு சட்டத்தின் கூட்டாட்சி கட்டமைப்புக்கு விரோதமானது என அறிவிக்கக் கோரியும், அரசு அனுமதியின்றி நடத்தப்பட்ட சோதனையை சட்டவிரோதனானது என அறிவிக்க கோரியும், விசாரணை என்ற பெயரில் டாஸ்மாக் அதிகாரிகளை துன்புறுத்தக் கூடாது என அமலாக்கத் துறைக்கு உத்தரவிடக் கோரி தமிழக உள்துறை செயலாளரும், டாஸ்மாக் நிர்வாக இயக்குநரும் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு, நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ் மற்றும் என். செந்தில் குமார் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, தமிழக அரசுத்தரப்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர் பி.எஸ்.ராமன், ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு மணல் குவாரி விவகா ரத்தில் அமலாக்கத் துறை இதுபோல சோதனை நடத்தியது. மாவட்ட ஆட்சியர்க ளுக்கு அனுப்பிய சம்மனுக்கு உயர் நீதிமன்றம் தடை விதித்தது. ஆனால் உச்ச நீதிமன்றம் விசாரணைக்கு ஆஜராக உத்தரவிட்டது. அதன்படி விசாரணைக்கு ஒத்துழைப்பும் வழங்கப்பட்டது எனத் தெரிவித்தார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், மாநில அரசு அனுமதி பெற்றுதான் சோதனை நடத்த வேண்டும் என மனுவில் கோரிக்கை விடுக்கப்ப ட்டுள்ளது. அமலாக்க துறையின் நடவடிக்கை தொடர்பாக குறிப்பிட்டு கோரிக்கை வைக்காமல் பொத்தாம் பொதுவாக கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தனர். மேலும், அதனை திருத்தம் செய்து புதிய மனுவை தாக்கல் செய்ய தமிழக அரசுக்கு நீதிபதிகள் அறிவுறுத்தினர்.

தொடர்ந்து டாஸ்மாக் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் விக்ரம் சவுத்ரி, “சோதனை நடத்தும் போது, அதற்குரிய காரணங்களை எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க வேண்டும். எந்தத் தகவலும் தெரிவிக்காமல் அலுவலகத்துக்குள் நுழைந்து அமலாக்கத் துறையினர் சோதனை நடத்தினர். குற்றம் மூலம் பணம் ஈட்டப்பட்டு சட்டவிரோதமாக பரிமாற்றம் செய்யப்பட்டதற்கு சந்தேகப்படுவதற்கான காரணங்கள் இருக்க வேண்டும்.” எனத் தெரிவித்தார்.

மேலும், “60 மணி நேரம் பெண் அதிகாரிகள் உள்ளிட்டோரை சட்டவிரோதமாக அமலாக்க துறையினர் சிறை பிடித்தனர். இது அதிகாரிகளின் தனிநபர் சுதந்திரத்துக்கு விரோதமானது.” என்றார். அரசு தலைமை வழக்கறிஞர், “பெண் அதிகாரிகள் காலை 11 மணி முதல் நள்ளிரவு வரை சிறை பிடித்துள்ள னர். அதிகாலை 1 மணிக்கு சிலரை வெளியில் செல்ல அனுமதித்து விட்டு காலை 8 மணிக்கு திரும்ப வேண்டும் என அறிவுறுத்தியுள்ளனர்” என்றார்.

இதையடுத்து நீதிபதி கள், டாஸ்மாக் அலுவலகம் சென்றதற்கான காரணங்களை அமலாக்கத் துறை தெரிவித்திருக்க வேண்டும் என்றுக்கூறி இரவில் ஏன் சோதனை நடத்தப்பட்டது என அமலாக்கத் துறைக்கு கேள்வி எழுப்பினர்.

இதை மறுத்த மத்திய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஏ.ஆர்.எல்.சுந்தரேசன், இரவில் சோதனை நடத்தப்படவில்லை. அனைவரும் வீடு திரும்ப அனுமதிக்கப்பட்டனர் என விளக்க மளித்தார்.

ஆனால், “பொய் சொல்ல வேண்டாம். அனைத்தும் செய்தித்தாள்களில் வெளியாகியுள்ளது.” எனக் குறிப்பிட்ட நீதிபதி கள், அமலாக்க துறை தனது அதிகாரத்தை செயல்படுத்திய விதத்தை தான் கேள்வி எழுப்புகிறோம் எனக் கூறி, அமலாக்கத் துறை பதிலளிக்க உத்தரவிட்டு, விசாரணையை மார்ச் 25ம் தேதிக்கு தள்ளிவைத்தனர்.

மேலும், அதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்க கூடாது என உத்தரவிட்ட நீதிபதிகள், எந்த வழக்குகளின் அடிப்படையில் அமலாக்கத் துறை சோதனை நடத்தியது என்பது குறித்த விவரங்களையும் பதில் மனுவில் தெரிவிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டனர்.



மதுரை வடக்கு மாவட்டம் கிழக்கு சட்டமன்றத் தொகுதி இளைஞர் அணி சார்பாக மும்மொழிக் கொள்கையை கடுமையாக எதிர்த்தும் பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்தும் ஆனையூரில் வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, மருது பாண்டியன், எம்.இளங்கோ, இளம் பேச்சாளர் ராஜபாரதி ஆகியோர் முன்னிலையில் கண்டன உரையாற்றினர். உடன் கழக நிர்வாகிகள் பாலசுப்பிரமணியன், வடிவேல் முருகன், தனச்செல்வம், நேரு பாண்டியன், கலை கார்த்திகேயன், சோமசுந்தர பாண்டியன், செல்வகணபதி, சிறைச்செல்வன், டாக்டர் செல்வகுமார் வீரராகவன் வாசுகி சசிகுமார் மருத ராஜா, ஐயப்பன், குமரேசன், அன்புச்செல்வன், வெற்றிச்செல்வன், வன்னி முத்து பாண்டியன் மற்றும் திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள் கலந்து கொண்டனர் .

## நெய்வேலி சட்டமன்றத் தொகுதி

# கெடிலம் ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்திட வேண்டும்!

### சட்டப்பேரவையில் – சபா.இராஜேந்திரன் கோரிக்கை!

*சென்னை, மார்ச் 21 -*

பேரவையில் கேள்வி நேரத்தின் போது கெடிலம் ஆற்றின் குறுக்கே தடுப்பணை ஒன்று அமைத்திட வேண்டும் என்று சபா.இராஜேந்திரன் கோரிக்கை விடுத்தார்.

இது குறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:



**சபா. இராஜேந்திரன்:** நெய்வேலி சட்டமன்றத் தொகுதி, திருவாமூர் ஊராட்சி, காமாட்சிப் பேட்டை கிராமத்தில் ஒரு தடுப்பணைக் கட்ட வேண்டுமென்பது அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாகும். NLC நிறுவனத்தால் நிலத்தடி நீரும் குறைந்து கொண்டே வருகிறது, குடிதண்ணீரும் உப்பாக மாறிக்கொண்டிருக்கிறது. எனவே, இவற்றையெல்லாம் சரிசெய்வதற்கு அமைச்சர் அவர்கள், அந்தப் பகுதியிலே, கெடிலம் ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணையைக் கட்டுவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் துரைமுருகன்:** என்னுடைய இலாகாவின் பெரிய கோரிக்கையே தடுப்பணைதான். இப்போது வந்திருப்பதால் நான் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், வருகிற நிதிநிலை, என்னுடைய இலாகாவிற்கு ஒதுக்கப்படுகிற நிதியை வைத்துப் பார்ததால் அங்கொன்றும், இங்கொன்றுமாகத்தான் கட்ட முடிகிறதே தவிர, எல்லா உறுப்பினர்களுடைய ஆசைகளையோ அல்லதுவிருப்பங்களையோ நிறைவேற்ற முடியவில்லை. எனவேதான் நான் சொன்னேன். சில நேரங்களில், நான் படிக்கும்போதே எங்கு தடுப்பணைக் கட்ட வேண்டுமென்று எனக்கு *detail* ஆகத் தெரியும். அதிலே சில இடங்களில் கட்ட வேண்டுமென்றாலும் நிதி நிலைமை சரியில்லை. ஆகையினால்தான் தென்னரசு அவர்களை உங்களுக்கு முன்னாலே நான் துணைக்கு அழைத்தேன். இதுகுறித்து முதலமைச்சர் அவர்களிடத்திலேயும் ஒரு முறை நான் சொல்லியிருக்கிறேன். எல்லா உறுப்பினர்களும் அணை கட்டித் தர வேண்டுமென்கிறார்கள். ஒரு காலத்தில் அணைக் கட்டு என்பார்கள். இப்போது அணை கட்டுகிற பிரச்சினை சென்றுவிட்டது. தடுப்பணை கட்டுவதில்தான் பிரச்சினை. தடுப்பணை கட்டுவதுதான் சாலச் சிறந்ததாக இருக்கிறது என்பதுகூட என்னுடைய அனுபவத்திலே நான் கண்டிருக்கிற உண்மை. ஆகையினால், இதுகுறித்து தனியாக முதலமைச்சர் அவர்களிடம் நான் பேசுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

## தனியார் பங்களிப்புடன்

# லிங்காரெட்டிபாளையம் கூட்டுறவு சர்க்கரை ஆலை இந்த ஆண்டு திறக்கபபடும்!

### எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா கேள்விக்கு முதல்வர் ந. ரங்கசாமி உறுதி!

*புதுச்சேரி, மார்ச் 21 -*

புதுச்சேரி லிங்காரெட்டிப்பாளையம் கூட்டுறவு சர்க்கரை ஆலை தனியார் பங்களிப்புடன் இந்த ஆண்டு திறக்கப் படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா எழுப்பிய கேள்விக்கு முதல்வர் ரங்கசாமி பதிலளித்துள்ளார்.

புதுச்சேரி சட்டப்பேரவையில் நேற்றைய கேள்வி நேரத்தின்போது நடந்த விவாதம் வருமாறு:

**எதிர்கட்சித்தலைவர் சிவா:** புதுச்சேரி லிங்கா ரெட்டிப் பாளையம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை மூடியதால், விவசாயிகள், தொழிலாளர்கள் மிகுந்த சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர். தனியார் பங்களிப்புடன் மாற்று வழியில் மீண்டும் ஆலையை திறந்து, செயல்படுத்த அரசு அறிவித்த அறிவிப்பின் நிலை என்ன? இந்த ஆண்டு அரசு ஆலையை திறக்க நடவடிக்கை எடுக்குமா?

**முதல்வர் ரங்கசாமி:** ஓய்வு பெற்ற அரசு அதிகாரி ஆலோசகராக நியமிக்க ப்பட்டு ஆலையை மீண்டும் நடத்த அறிக்கை பெறப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்த ஆண்டே திறக்க முயற்சிகள் எடுக்கப்படும்.

**எதிர்கட்சித்தலைவர் சிவா:** நலிவடைந்த பல ஆலைகள் மூடப்பட்டு ள்ளது. மத்திய அரசு சர்க்கரை ஆலையை திறக்கவும், எத்தனால் தயாரிக்கவும் அனுமதி வழங்கியுள்ளது. இங்கு எரி சாராயம் தயாரிக்கலாம். நல்ல நிலையில் ஓடிக் கொண்டிருந்த ஆலையை கவனத்தில் எடுத்து மீண்டும் திறக்க வேண்டும்.

**முதல்வர் ரங்கசாமி:** அந்த ஆலையை பற்றி முழுமையாக எனக்கு தெரியும். நல்ல நிலையில்தான் ஓடியது, லாபமும் தந்தது. ஆனால் அங்கு வேலை பார்த்த ஊழியர்களுக்கு சம்பளம் அதிகம். சம்பளத்தை இப்போது வரை கொடுத்து வருகிறோம். எந்த முடிவையும் எடுக்கவிடாததால் தான் ஆலையை திறக்க முடியவில்லை. சில காரணங்களால் நஷ்டமும் ஏற்பட்டது.

**எதிர்கட்சித்தலைவர் சிவா:** அனைத்து ஊழியர்களுக்கும் சம்பளம் தரவில்லை. ஆலையை பாதுகாப்பவர்களுக்கு மட்டும் தான் சம்பளம் தருகிறீர்கள். கரும்பு வழங்கியவர்களுக்கே இன்றுவரை பணம் வழங்கவில்லை.

**முதல்வர் ரங்கசாமி:** கடந்த ஆண்டு ரூ.37 கோடி ஆலை ஊழியர்களுக்கு சம்பளமாக வழங்கியுள்ளோம். அனைவருக்கும் தான் சம்பளம் தருகிறோம். ஆலைக்கு கரும்பு அனுப்பும் விவசாயிகள்தான் அங்கு வேலைபார்க்கின்றனர். அவர்கள் எந்த முடிவும் எடுக்கவிடுவதில்லை. தற்போது ஆலை மூடும் நிலைக்கு வந்த பிறகு, ஆலையை திறந்து, எத்தனால் தயாரிக்க ஒப்புதல் தருகிறார்கள். இதுதொடர்பாக அமைச்சரவையில் முடிவெடுத்துள் ளோம். விரைவில் தனியார் பங்களிப்போடு ஆலையை திறந்து மீண்டும் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதுதொடர்பாக வாக்குறுதியும் அளித்துள்ளோம். தனியார் நிறுவனத்தினர் ஆலையை பார்வையிட்டு வருகின்றனர். சர்க்கரை ஆலை இந்த ஆண்டே திறக்கப்படும்.

இவ்வாறு விவாதம் நடந்தது.



புதுச்சேரி அரசு ஆதிதிராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் வில்லியனூர் தொகுதியைச் சேர்ந்த கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு நிதி உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் சுமார் 30 நபர்களுக்கு 4 லட்சத்து 60 ஆயிரம் தொகையை 18,000 மற்றும் 13,000 வீதம் அவரவர் வங்கிக் கணக்கில் செலுத்தியதற்கான ஆணையை வில்லியனூர் தொகுதி சட்டமன்ற அலுவலகத்தில் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் மாநில எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா பயனாளிகளுக்கு வழங்கினார். நிகழ்ச்சியில் மணிகண்டன், ஜலால் அணிப், அங்காளன், கதிரவன், அரிகிருஷ்ணன், ஜெகன்மோகன், சுப்பிரமணியன் மற்றும் சபரி, ராஜி, மிலிட்டரி முருகன், சேகர், வீரக்கண்ணு, முருகன், கார்த்திகேயன், மனோகர், ராமஜெயம், ரகு, ராஜன், காளிதாஸ் மற்றும் பலர் உடனிருந்தனர்.

## விவசாயிகள் வாழ்வாதாரம் பாதிப்பு! ஈரோடு தொகுதியில்

# வெறிநாய்களைக் கட்டுப்படுத்த ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்!

### மக்களவையில் கே.இ.பிரகாஷ் கோரிக்கை!

*புதுடெல்லி, மார்ச் 21 -*

ஈரோடு தொகுதியில் வெறிநாய்கள் அதிகமாகி உள்ளது எனவும், இதனால் விவசாயிகள் வளர்க்கிற ஆடு, மாடுகள் பலியாவதால் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது என்றும், எனவே வெறிநாய்களை கட்டுப்படுத்த ஒன்றிய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்களவையில் கழக உறுப்பினர் கே.இ.பிர காஷ் வலியுறுத்தினார்.



இது குறித்து அவர் மக்களவையில் பேசியதாவது:

சபாநாயகர் அவர்களே எனது ஈரோடு நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட தாராபுரம் காங்கேயம் மொடக்குறிச்சி ஈரோடு கிழக்கு ஈரோடு மேற்கு குமாரபாளையம் சட்டமன்ற தொகுதி மற்றும் சென்னிமலை பகுதியில் தெரு நாய்கள் மற்றும் நோய்வாய் பட்ட வெறி நாய்கள் அதிகம் காணப்படுவதால் பொதுமக்கள் மிகவும் அச்சத்திற்குள்ளாகியுள்ளனர்.

இதில் கிராமப்புறங்களில் விவசாயிகள் கடும் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளார்கள் அவர்களுடைய வளர்ப்பு பிராணி ஆன ஆடு மாடு கோழிகள் மற்றும் நோய்வாய்ப்பட்ட வெறி நாய்களின் தாக்குதலால் அவ்வகைப் பிராணிகள் இறப்பிற்குள்ளாகி விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளது.

வீட்டில் வளர்க்கும் நாய்களினால் நோய் ஏற்படும் போது குழந்தைகள் பாதிப்புக்கு உள்ளாகி உயிர் இழப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால் ஒன்றிய அரசு தாக்குதல் உட்பட்ட பிராணிகளுக்கு கணக்கெடுப்பு நடத்தி அவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டுகிறேன்

அதே சமயம் இந்த நோய்வாய் பட்ட வெறி நாய்களை கட்டுப்படுத்த ஒன்றிய அரசு சட்ட திருத்தம் கொண்டு வர வேண்டும் .

மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய நோய் வாய்ப்பட்ட வெறி நாய்களை ப்ளூ கிராஸ் அமைப்பு மற்றும் அனிமல் வெல்ஃபேர் போர்ட் ஆஃப் இந்தியா என்ன நடவடிக்கை எடுக்கிறது என்று தெளிவுபடுத்த வேண்டும்

அதே போல வரும் காலங்களில் பாதிப்பு ஏற்படும்போது விவசாயிகளுக்கு தங்களுடைய பொருளாதார இழப்பு ஏற்படாத வகையில் வீட்டு வளர்ப்பு பிராணிகளுக்கு ஆடு மாடு கோழி போன்றவைகளுக்கு ஒன்றிய அரசு உயிர் காப்பீடு செய்து கொடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு போராடும்
தமிழ்நாடு வெல்லும்

இவ்வாறு கே.இ. பிரகாஷ் எம்.பி. பேசினார்.

# காளையார்கோயில் கிழக்கு ஒன்றிய பாக நிலை முகவர்கள் கூட்டம்!

### தொகுதி பொறுப்பாளர் க. சண்முகம் சிறப்புரை! ஆரோக்கியசாமி ஏற்பாடு!

*சிவகங்கை, மார்ச் 21 -*

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் கிழக்கு ஒன்றிய பாக நிலை முகவர்கள் கூட்டம் மாவட்ட கழகச் செயலாளரும் கூட்டுறவுத் துறை அமைச்சருமான கேஆர். பெரியகருப்பன் ஆலோசனையின் பேரில் காளையார் கோவில், புலியடி தம்பம், காளகண்மாய் சிலுக்குப்பட்டி, ஒய்ய வந்தான் ஆகிய ஐந்து இடங்களில் ஒன்றிய கழகச் செயலாளர் வே.ஆரோக்கியசாமி தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் சிவகங்கை சட்டமன்ற தொகுதி பொறுப்பாளரும் புதுக்கோட்டை மாவட்ட இளைஞரணி அமைப்பாளருமான க.சண்முகம், நடைபெற உள்ள 2026 தேர்தலில் பாகநிலை முகவர்கள் ஆற்ற வேண்டிய தேர்தல் பணிகள் குறித்து விளக்கி பேசினார்.

இந்த கூட்டத்தில் நிர்வாகிகள் கந்தசாமி, வனிதா கண்ணதாசன் மற்றும் பாகநிலை முகவர்கள் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.




## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், கழக இளைஞர் அணி மண்டலம்–4க்கு உட்பட்ட தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்திய, ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, ஈரோடு மத்திய ஆகிய கழக மாவட்டங்களுக்கான ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான அறிமுகக் கூட்டத்தை, மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், அந்தந்த மாவட்டங்களில் ஏற்பாடு செய்திட வேண்டுமென மாநில இளைஞர் அணித் துணைச் செயலாளர், மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 18-03-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி